திரு. கே. கந்தசாமி : மதுரை மாவட்டத்திலுள்ள எனது உசிலம் பட்டி தொகுதியில் தொழிற்சாலையே இல்லாத காரணத்தினால், அங்கு நூற்பாலையாவது ஏற்படுத்த வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் அங்கு வந்தபோது அவரிடத்தில் தெரிவிக்கப்பட்டது. அமைச்சர் அவர்களும் அதை கவனிப்பதாக உறுதி சொன்னார்கள். வெண்மைப் புரட்சியை அதிகப்படுத்த வேண்டுமென்று கூறியதை ஏற்று நாங்கள் முடித்திருக்கிறோம். வெண்மைப் புரட்சியில் வெற்றிகண்ட, அப்பகுதி மக்களுக்காக அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து நூற்பாலையைக் கொண்டு வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வெண்மைப் புரட்சி என்பது பருத்தி உற்பத்தி என்று நான் ஊகித்துக்கொள்ளுகின்றேன். ஒரு நூற் பாலைக்குத் தேவையான பருத்தியை சாகுபடி செய்ய போதுமான ஏக்கர் நிலங்களை ஒதுக்க அங்குள்ளவர்கள் முன்வருவார்களானால் அதை ஏற் படுத்தலாம் என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். உறுப்பினர் விவசாயிகளிடத்திலே அப்படிப்பட்ட நிலையினை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாயூரத்திலுள்ள இரயில்வே மேம்பால வேலை.

*57—வினா : திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மாயூரத்தில் நடைபெற்று வரும் இரயில்வே மேம்பாலத் திட்ட வேலையினால் குடியிருப்பு இடங்கள் எவையேனும் பாதிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன மாற்று உதவி செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) ஆம். 13 குடியிருப்புகள் பாதிக்கப்படுகின்றன.

(இ) ஆறு குடியிருப்புகளுக்கு மாற்று இடம் கொடுக்கப்படும். ஏழு குடியிருப்புகளுக்கு நஷ்டஈடு கொடுக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, ஏறத்தாழ ரூ. 45 லட்சம் மதிப்பீட்டில், மாயூரத்திலே அமைக்கப்பட்டு வரும் இந்த மேம்பாலத் திற்கு தேவைப்படுகின்ற இடங்கள், அதாவது குடியிருப்புகளை அப்புறப் படுத்துவதற்காக அங்குள்ள அதிகாரிகள் அதிகமான முயற்சி எடுக்காத காரணத்தினால், 18 மாதத்திற்குள் முடியவேண்டிய அந்த மேம்பால வேலை இப்பொழுது நிறுத்தப்பட்டு இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அந்த வேலையைத் தொடர்ந்து அங்கே நடத்துவதற்கு அரசாங்கம் ஆவன செய்ய முன்வருமா?

1972 டிசம்பர் 6]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கேள்வி, அங்கிருக்கிற வீடுகளை அப்புறப்படுத்துகின்ற பிரச்சினையைப் பற்றியது. இதைப்பற்றி நடவடிக்கை எடுத்திருப்பதாக நான் குறிப்பிட்டிருக்கிறேன். பால வேலைகளைப்பற்றி காலதாமதம் ஏற்பட்டதாகக் குறிப்பில்லை. எனவே, தனியாகக் கேள்வி கேட்க வேண்டுகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : சார், பொதுவாக, இந்த மேம்பால வேலைகளைக் காண்டிராக்ட்டுக்கு விடுகின்ற அந்த நேரத்தில் சரியான, ரீதியான, சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு காண்ட்ராக்ட்டுகள் விடப்படாத காரணத்தினாலே, சில மேம்பாலங்கள் அப்படியே விழக்கூடிய காட்சி, பரவலாக, கோயம்புத்தூரிலே நடந்திருக்கிறது. ஆகவே, இம்மாதிரியான சம்பவங்களைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? ஏன் அப்படி விழவேண்டும்? இதற்கெல்லாம் என்ன காரணம்? இதை ஆராய்ச்சி செய்ய அரசாங்கம் தயாராக இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒரு வேலையை டெண்டர் விடும்பொழுது குறிப்பிட்ட கண்டிஷன்கள் இருக்கின்றன, அந்த கண்டிஷன்களின் அடிப்படையிலேதான் டெண்டர் விடவேண்டும் அந்த கண்டிஷன்கள்படிதான் டெண்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. கோயம்புத்தூருக்குப் பக்கத்திலே உள்ள வேலையைப் பொறுத்தவரையிலும் கூட கண்டிஷன்களின்படிதான் டெண்டர்கள் கேட்கப்பட்டன, லோயஸ்ட் டெண்டர்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எதிர்பாராத வேளையிலே அப்படி ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றி தலைமைப் பொறியாளரிடம் அறிக்கை கேட்டிருக்கிறோம். அவரிடமிருந்து அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா : அந்த மேம்பாலம் கட்டுவதற்காக அங்கேயுள்ள இரயில்வே பாதை செல்கிற இடத்தில் பாலம் கட்டுவதற்காக கடந்த இரண்டாண்டுக் காலமாகவே ரயில்வே இலாகாவே உத்திரவு வழங்காத காரணத்தினால் இன்னும் அந்த வேலை தொடங்கப்படாமல் இருக்கிறது, என்பது அரசுக்குத் தெரியுமா? அந்த வேலையை உடனடியாக தொடங்கக்கூடிய முறையிலே ஆவன செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதிலே இரயில்வே இலாகா ஒத்துழைப்புக் கொடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. இதுபற்றி தலைமைப் பொறியாளர் அவர்கள் இரயில்வே இலாகாவோடு தொடர்புகொண்டு ஒத்துழைப்பைப் பெற முயற்சிசெய்து வருகிறார்கள்.

ஹாஜ் பயணிகள்.

*58—வினா : திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழகத்தில் இருந்து புனித ஹாஜ் பிரயாணம் செய்யும் முஸ்லீம்களுக்கு வசதி செய்து தரவேண்டுமென்று மத்திய அரசு மாநில அரசுக்கு பரிந்துரை செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?